# வெள்ளகோவில் நகராட்சி, திருப்பூர் மாவட்டம்

## 2018–ம் ஆண்டு ஜனவரி மாதம் 12–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம் தீர்மானம் நகல்கள்

### தீர்மானம் எண் : 1 / 2018, நாள் : 12.01.2018

இந்நகராட்சிக்குச் சொந்தமான ஆடுவதை சாலை கட்டணம் வசூல் செய்ய கடந்த 14 முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வழங்கப்பட்டு எவரும் கலந்து கொள்ளாததால் 14–ம் முறையாக 05.01.2018–ல் ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் கோரி அறிவிப்பு வழங்கப்பட்டது. மேற்படி ஏலத்தில் திரு. என். சுகுமாரன், த/பெ. நாச்சிமுத்து, 318, சக்தி நகர், வெள்ளகோவில் என்பவர் மட்டுமே அரசு ஏலத்தொகையாக ரூ. 21,000 /–ம் நிர்ணயம் செய்ததில் அன்னார் தனது ஏல கேள்வி தொகையாக ரூ. 21,200 /– கூறினார். மேலும் கிருஷ்ணன் என்பவர் ஏலத்தில் கலந்து கொண்டு ஏலம் கோரவில்லை.

இந்நிலையில் திரு. எம். கிருஷ்ணன், த/பெ.பி.கே. முத்தப்பமுதலியார், 99/ஜி, எல்.கே.சி.நகர், வெள்ளகோவில் என்பவரால் தெரிவிக்கப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது. மேற்படி அன்னார் தனது ஒப்பந்தப்புள்ளியில் ஆடுவதை சாலை கட்டணம் ஒரு வருடத்திற்கு ரூ. 25,000 /–ம் தெரிவித்துள்ளார். மேற்படி 14 ஏலங்களில் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஒரு நபரும் கலந்து கொள்ளாததாலும் மூன்று வருட சராசரி தொகையான ரூ. 18,514 /–விட அன்னாரின் ஒப்பந்தப்புள்ளி தொகை 30 சதவீதத்தை விட அதிகம் உள்ளதாலும், திரு. எம். கிருஷ்ணன், த/பெ. பி.கே. முத்தப்பமுதலியார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. 25,000 /–த்திற்கு ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

<u>அலுவலகுறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) கடந்த 14 முறை ஏலம் கோரி எவரும் கலந்து கொள்ளாததால், தற்போது கோரியுள்ள ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மன்றம் ஏற்கலாம்.

(கோப்பு எண். 1578 / 2017 / அ1)

**தீர்மானம் – அலுவலகுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

### தீர்மானம் எண் : 2 / 2018, நாள் : 12.01.2018

இந்நகராட்சியை தனித்த உள்ளூர் திட்டப்பகுதியாக அறிவிப்பு செய்ய தமிழ்நாடு அரசிதழ் எண். 2, Part-II, Section-2 பக்கம் எண்.11–ல் அறிவிக்கை வெளியிடப்பட்டது. தொடர் நடவடிக்கையாக தினசரி நாளிதழில் வெளியிட மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பியதில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பூர் அவர்களின் வெ.ஆணை எண். 291 / 2017 / செ.ம.தொ. /2017, நாள். 07.12.2017–ன்படி தினபூமி நாளிதழில் 08.12.2017–ல் பக்கம் எண். 07–ல் வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி விளம்பரம் செய்தமைக்கு பட்டியல் எண். 3142 / che / 2016-2017, date. 08.12.2017-ல் தொகை ரூ. 4738 /– கோரப்பட்டுள்ளது. எனவே மேற்படி பட்டியல் தொகை ரூ. 4738 /–ஐ Bright dvertising நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 604 / 2017 / இ1)

**தீர்மானம் – அலுவலகுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

### தீர்மானம் எண் : 3 / 2018, நாள் : 12.01.2018

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்காணும் பணி மேற்கொள்ள 12.01.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | <u>2017–18–ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம்</u> நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 21, அமராவதி நகர் பகுதியில் புதியதாக ஆழ்குழாய் கிணறு அமைத்தல் | 1,50,000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 4.73 % அதிகம் |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 5.06 % அதிகம் |

அலுவலககுறிப்பு

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீரா கன்ஸ்ட்ரக்சன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 975 / 2017 / இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 4 / 2018, நாள் : 12.01.2018**

TURIP 2017-18-ன்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்க மாநில அளவில் ஒரு தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் (The New Indian Express and Makkal Kural) வெளியிட்டமைக்கு பட்டியல் தொகை ரூ. 86,625 /–ஐ வழங் / கக் கோரி ரவி பப்ளிசிட்டி சர்வீஸ் – சென்னை பட்டியல் எண். RPS / 17-18 / 1122, நாள். 11.11.2017 மூலம் கடிதம் கிடைக்கப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 989 / 2017 / இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 5 / 2018, நாள் : 12.01.2018**

வெள்ளகோவில் நகராட்சிக்குச் சொந்தமான உப்புப்பாளையம் கிழக்கு, அம்மன்கோவில் வீதி, தீத்தாம்பாளையம் காலணி ஆகிய பகுதிகளில் மூன்று சமுதாய பொதுக்கழிப்பிடங்களையும் பராமரிக்க வெண்மணி மகளிர் சுய உதவிக்குழு தீத்தாம்பாளையம் அவர்கள் விண்ணப்பம் அளித்ததின் அடிபபடையில் மூன்று கழிப்பிடங்களையும் குழு மூலம் நிபந்தனைகளின் அடிப்படையில் பராமரிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். / 2017 / இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 6 / 2018, நாள் : 12.01.2018**

வெள்ளகோவில் நகராட்சி பொதுப்பிரிவில் உள்ள Kyocera copier model Taskalfa TA3010i xerox Machine Drum kit பழுதடைந்துள்ளதால் சரிவர பிரிண்ட் எடுக்க முடியவில்லை. இதனை சரிசெய்யவும், Drum kit மாற்றியமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான உத்தேச செலவினம் ரூ. 40,000 /–ம் ஆகும்.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். / 2017 / இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்படுகிறது**

**தீர்மானம் எண் : 7 / 2018, நாள் : 12.01.2018**

நகராட்சிக்குட்பட்ட வெட்டுக்காடு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பி.வி.சி. வாட்டர் டேங்க் உடைந்து பழுதடைந்துள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே இதனை அகற்றிவிட்டு புதியதாக 3000 லிட்டர் பி.வி.சி. வாட்டர் டேங்க் அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. இதற்கான உத்தே தச மதிப்பீடு ரூ. 30,000 /–ம் ஆகும்.

அலுவலககுறிப்பு

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 945 / 2017 / இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 8 / 2018, நாள் : 12.01.2018</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதார வாகனம் ஜே.சி.பி. எண். TN 42 V 6546 பின்பக்க டயர்கள் மிகவும் தேய்மானம் அடைந்துவிட்டதால், புதிய டயர்கள் வாங்கி பொருத்த உத்தேச செலவினம் ரூ. 58,000 /—க்கு நகர்மன்றம் அனுமதிக்கப்பட்டது. தீர்மானம் எண். 359 / 2017, நாள். 29.12.2017. மேற்கண்ட வாகனத்திற்கு புதிய டயர்கள் வாங்க உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதால் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன.

| வ.எண் | டயர் ஏஜென்சி முகவரி | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீபாலாஜி டயர் பாயிண்ட், சூலூர் | ரூ. 57,400 /— |
| 2 | ஸ்ரீசிவன்மலை ஆண்டவர் டயர்ஸ், பொங்களூர் | ரூ. 57,000 /— |
| 3 | ஸ்ரீபாலாஜி டயர்ஸ், காங்கயம் | ரூ. 56,900 /— |

<u>அலுவலககுறிப்பு</u>

மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி தெரிவித்துள்ள ஸ்ரீபாலாஜி டயர்ஸ், காங்கயம் அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

(கோப்பு எண். 2144/ 2017 / எச்1)

**தீர்மானம் — அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 9 / 2018, நாள் : 12.01.2018</u>**

வெள்ளகோவில் நகராட்சி எல்.கே.சி.நகர் கதவு எண். 37/1 உள்ள வீட்டிற்கு குடிநீர் இணைப்பு பெற விஜயஆனந்தி, க/பெ. ராஜசேகரன் என்பவர் குடிநீர் இணைப்பிற்கான டெபாசிட் தொகை ரூ. 16,000 /—யை கரூர் வைஸ்யா வங்கி, வெள்ளகோவில் கிளையில் செலுத்தியுள்ளார் (நாள். 08.02.2017). மேலும் வீட்டு குடிநீர் இணைப்பிற்கான டெபாசிட் கட்டம் ணரூ. 8000 /—ம் என நகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே கூடுதலாக செலுத்திய தொகை ரூ. 8000 /—ஐ திரும்ப வழங்கக் கோரி மனு அளித்துள்ளார். கூடுதலாக செலுத்திய தொகை ரூ. 8000 /—ம் திருப்பி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். / 2017 /இ1)

**தீர்மானம் — அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 10 / 2018, நாள் : 12.01.2018</u>**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதாரப்பணி வாகனம் டிப்பர் லாரி எண். TN 33 AZ 7538-க்கு 13.02.2018—ந் தேதியுடன் தகுதிச்சான்று முடிவடைவதால், மேற்படி வாகனத்திற்கு தகுதி சான்று பெற மேலும் வண்டியில் உள்ள பழுதுகள் நீக்கம் செய்து பெயிண்டிங் வேலைகள் மேற்கொள்ளலாம். பணிக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான உத்தேச செலவினம் ரூ. 77,000 /—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் விலைப்புள்ளி பெற்று அவசர அவசியம் கருதி பணிமேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 27 / 2018 / எச்1)

**தீர்மானம் — அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 11 / 2018, நாள் : 12.01.2018</u>**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதாரப்பணி வாகனம் டம்பர் பிளேசர் வாகனம் எண். TN 42 V 7094-க்கு தகுதி சான்று 31.01.2018—ந் தேதியுடன் முடிவடைவதால் மேற்படி வாகனத்திற்கு தகுதி சான்று பெற வண்டியில் உள்ள பழுதுகள் நீக்கம் செய்து பெயிண்டிங் வேலைகள் மேற்கொள்ளும் பணிக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான உத்தேச செலவினம் ரூ. 73,000 /—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் விலைப்புள்ளி பெற்று அவசர அவசியம் கருதி பணிமேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2143 / 2017 / எச்1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 12 / 2018, நாள் : 12.01.2018</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்கு 2016–2017 ஆம் ஆண்டிற்கு ஆண்டு கணக்குகள் தனியார் மூலம் தயார் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ. 50,000 /–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1570 / 2017 / பி1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 13 / 2018, நாள் : 12.01.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 10 வரையிலான பகுதிகளில் குடிநீர் மெயின் குழாய்கள், விநியோகக் குழாய்கள் மற்றும் கேட் வால்வுகள், கைபம்புகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கான மதிப்பீட்டுத் தொகை (ஒப்பந்த) முடிவடைந்துள்ளது. எனவே மேற்படி பராமரிப்பு பணிகளை பொதுமக்கள் நலன் கருதியும், குடிநீர் அவசர அவசியம் கருதியும் உடனடியாகவும் உடனுக்குடனும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மேற்படி பராமரிப்பு பணி ஒப்பந்தாரருக்கு அதே விலை விகிதத்தில் மார்ச் மாதம் வரை இப்பணியை மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கி நீட்டிப்பு செய்யலாம். இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 4,50,000 /–ம் ஆகும், இதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். / 2017 / இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 14 / 2018, நாள் : 12.01.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 11 முதல் 21 வரையிலான பகுதிகளில் குடிநீர் மெயின் குழாய்கள், விநியோகக் குழாய்கள் மற்றும் கேட் வால்வுகள், கைபம்புகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கான மதிப்பீட்டுத் தொகை (ஒப்பந்த) முடிவடைந்துள்ளது. எனவே மேற்படி பராமரிப்பு பணிகளை பொதுமக்கள் நலன் கருதியும், குடிநீர் அவசர அவசியம் கருதியும் உடனடியாகவும் உடனுக்குடனும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மேற்படி பராமரிப்பு பணி ஒப்பந்தாரருக்கு அதே விலை விகிதத்தில் மார்ச் மாதம் வரை இப்பணியை மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கி நீட்டிப்பு செய்யலாம். இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 4,50,000 /–ம் ஆகும், இதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். / 2017 / இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 15 / 2018, நாள் : 12.01.2018</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட குடிநீர் திட்ட மேல்நிலைத் தொட்டிகளில் அளவுமானி இல்லாததால், குடிநீர் அளவுகளைகான மேல்நிலை தொட்டிகளில் மேலே சென்று பார்வையிட வேண்டியுள்ளது. எனவே மேல்நிலைத் தொட்டிகளில் அளவுமானி பொருத்தி தர பொருத்துனர் மனு அளித்துள்ளார். மேற்படி மேல்நிலைத் தொட்டிகளுக்கு அளவுமானிகள் பொருத்த உத்தேச மதிப்பீடு ரூ. 1,50,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். / 2018 / இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 16 / 2018, நாள் : 12.01.2018</u>**

வெள்ளகோவில் நகராட்சியானது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 270 நாள்: 11.06.2004 முதல் பேரூராட்சியாக இருந்து மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு பின் அரசாணை எண். 154, நாள் : 09.08.2010—ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி மொத்தப் 64.75 சதுர கி.மீ பரப்பளவு கொண்டதாகும். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி சுமார் 40359 ஆகும். இந்நகராட்சியில் மொத்தமுள்ள வார்டுகளின் எண்ணிக்கை 21, வடிகால்களின் நீளம் 18 கி.மீ, வீதிகளின் எண்ணிக்கை சுமார் 105 ஆகவுமுள்ளது. திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தினசரி சேகராமாகும் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளின் அளவு 17 மெ.டன். ஆகும். சேகரம் செய்யப்படும் குப்பைகளை நகராட்சி வாகனங்களான டிப்பர் லாரி-3 டம்பர் பிளேசர்-2 ஜே.சி.பி-1 சைக்கிள் ரிக்ஷா-10 மற்றும் தள்ளுவண்டிகள்-31 ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. இதில் தற்போது 26 நிரந்தர துப்புரவு பணியாளர்களில் 25 துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். இப்பணியாளர்களைக்கொண்டு பொதுசுகாதார பணியை திறம்பட செயல்படுத்திட முடியாத நிலை உள்ளதால், குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 101, நாள் : 30.04.1997—ல் குறிப்பிட்டுள்ள கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ள அளவுகோலின்படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, அவர்களால் ந.க. எண். 38162/பி3/2014-4 நாள். 22.01.2015—ன்படியும் 226 தற்காலிக சுகாதார பணியாளர்களை தனியார் நிறுவனம் மூலம் பணி செய்திட உத்திரவிடப்பட்டு உள்ளது. (Engagement of labours on contract basis by out sourcing from private service Provider for the sanitation work).

எனவே, பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 42 ஒப்பந்த துப்புரவு பணியாளர்களை தனியார் நிறுவனம் மூலம் சப்ளை செய்ய இந்நகர்மன்ற தீர்மான எண்.135/2015 நாள்.20.10.2015-ந் தேதியின்படி மன்றம் அனுமதி வழங்கப்பட்டு, திரு. துரை&கோ எனும் நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று அந்நிறுவனத்துக்கு 04.03.2016 முதல் 03.03.2017 வரை பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்க இந்நகர்மன்றம் தனது தீர்மான எண். 19/2016 நாள். 01.02.2016-ல் தீர்மானிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 21 வரையிலான தெருக்களில் துப்புரவு பணி மேற்கொள்வதற்கும், மழைநீர் வடிகால் சுத்தம் செய்யும் பணிக்கும் ஒப்பந்த துப்புரவு பணியாளர்கள் 42 பேர் ஒரு வருட காலத்திற்கு துப்புரவு பணிகளை மேற்கொள்ள ந.க.எண். 130/2013/எச்1, நாள். 03.03.2016-ன்படி நபர் ஒன்றுக்கு ரூ. 393.70 /- வீதம் (தினக்கூலி, சீருடை, பாதுகாப்பு உபகரணங்கள், தொழிலாளர் வைப்பு நிதி, ஆயுள் காப்பீடு, சர்வீஸ் சார்ஜ் உட்பட) உத்தரவு வழங்கப்பட்டது. மேற்கண்ட உத்தரவின்படி திடக்கழிவு மேலாண்மை பணிகள் திறம்பட நடைபெற்று வருகிறது. மேலும் திரு. துரை&கோ எனும் தனியார் நிறுவனத்தின் மூலம் துப்புரவு பணிக்கான ஒப்பந்த காலத்தை மேற்கொள்ள மேலும் ஒரு வருட காலத்திற்கு 04.03.2017-ந் தேதி முதல் 03.03.2018-ந் தேதி வரை இந்நகராட்சியால் தெரிவிக்கப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 42 பணியாளர்களை சப்ளை செய்ய 03.03.2017-ந் தேதியில் சம்மதக் கடிதம் கொடுத்துள்ளதன்படியும் நகர்மன்ற தீர்மானம் எண். 19/2016, நாள். 01.02.2016-ல் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானத்தின் படியும் மேலும் ஒரு வருட காலத்திற்கு திரு.துரை&கோ எனும் நிறுவனத்தின் மூலம் பொது சுகாதார பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண். 66/2017 நாள். 17.02.2017-ன்படி தீர்மானிக்கப்பட்டு பணிகள் தொய்வின்றி நடைபெற்று வருகிறது.

தற்போது மேற்கண்ட தனியார் ஒப்பந்த காலம் 03.03.2018-ந் தேதியுடன் முடிவடைவதால் திரு. துரை & கோ எனும் நிறுவனத்தில் மேலும் ஒரு வருட காலத்திற்கு 04.03.2018-ந்தேதி முதல் 03.03.2019-ந் தேதி வரை 42 பணியாளர்களை (4.50%) கூடுதல் ஒப்பந்த விலைக்கு மாவட்ட ஆட்சியர் தினக்கூலி விலைப்பட்டியல் சப்ளை செய்ய ந.க. எண்: 5863/2017, நாள். 22.04.2017 மற்றும் 04.01.2018-ந் தேதியில் சம்மதக் கடிதம் கொடுத்துள்ளார். எனவே பொது சுகாதார பணிகள் பாதிக்காத வகையில் துப்புரவு பணிகள் மேற்கொள்ளவும் பொது சுகாதார அவசர அவசியம் கருதியும்,மேலும் ஒரு வருட காலத்திற்கு 04.03.2018 முதல் 03.03.2019 முடிய திரு. துரை&கோ எனும் நிறுவனத்தின் மூலம் பொது சுகாதார பணிகள் மேற்கொள்ள வேண்டப்படுகிறது. உத்தேச மதிப்பீடு ரூ. 70.00 இலட்சம்.

<u>அலுவலக குறிப்பு</u>

திடக்கழிவு மேலாண்மை பணியினை தொடர்ந்து செயல்படுத்திடவும், பொது சுகாதார பணி பாதிப்பு ஏற்படாத வகையிலும் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள்

ந.க.எண். 5863/2017/உ3, நாள். 22.04.2017-ந் தேதிய உத்திரவில் அனுமதிக்கப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் திரு. துரை&கோ அவர்கள் 04.03.2018 முதல் 03.03.2019 வரை ஒரு வருட காலத்திற்கு நிபந்தனைகளுக்குடபட்டு தனியார் துப்புரவு பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
( கோப்பு எண்:1559/2017/எச்1)

**தீர்மானம் – அலுவலகுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 17 / 2018, நாள் : 12.01.2018</u>**

இந்நகராட்சிக்குச் சொந்தமான குத்தகை இனங்களான கீழ்காணும் **21** கடைகளுக்கான குத்தகை உரிமக்காலம் 01.04.2009 முதல் 31.03.2018 வரையான **9** வருட குத்தகை 31.03.2018–ந் தேதியுடன் முடிவடையும் நிலையில் உள்ளது. எனவே மேற்காணும் இனங்களுக்கு 01.04.2018 முதல் 31.03.2026 வரையான **9** ஆண்டுகளுக்கான குத்தகை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், மேற்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி வரவேற்று தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும், ஒப்பந்தம் மற்றும் ஏல நிபந்தனைகள் ஒப்பந்ததாரர்களுக்கு அச்சிட்டு வழங்கவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ. 1,00,000 /–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

| வ.எண் | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பேருந்து நிலைய கடை எண். 1,2,3,4,6,7,8 | 7 |
| 2 | வாரச்சந்தை முகப்பு கடை எண். 1,2,3,4,5,6,7,8,9,10 | 10 |
| 3 | தீத்தாம்பாளையம் வணிக வளாகக் கடை எண். 1,2,3,4 | 4 |
| | **மொத்தம்** | **21** |

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(கோப்பு எண். 2032 / 2017 / அ3)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 18 / 2018, நாள் : 12.01.2018</u>**

இந்நகராட்சிக்குச் சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்கள் குத்தகை காலம் 01.04.2015 முதல் 31.03.2018 வரை மூன்றாண்டுகள் முடிவுறும் நிலையில் உள்ளது.

| வ.எண் | குத்தகை விபரம் |
|---|---|
| 1 | பேருந்து நிலைய நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 2 | இந்திரா நகர் கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 3 | மூலனூர் ரோடு கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 4 | பேருந்து நிலைய இருசக்கர வாகன நிறுத்துமிட கட்டணம் வசூலிக்கும் உரிமம் |

எனவே மேற்காணும் இனங்களுக்கு **01.04.2018** முதல் **31.03.2021** வரையான மூன்றாண்டு காலத்திற்கு ஏலம் கோரப்பட வேண்டும். மேற்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கும், மேற்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி வரவேற்று தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும், ஏல மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை ஒப்பந்ததாரர்களுக்கு அச்சிட்டு வழங்கவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ. **1,00,000** /–க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(கோப்பு எண். 2032 / 2017 / அ3)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 19 / 2018, நாள் : 12.01.2018</u>**

இந்நகராட்சி பொது சுகாதார பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் டம்பர் பின்கள் தற்சமயம் 74 உள்ளது. இதில் 14 எண்ணிக்கை பழுதடைந்துள்ளதாகவும், இதனை சரிசெய்ய வேண்டி துப்புரவு

ஆய்வாளர் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி பழுது பார்க்கும் பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான உத்தேச செலவினம் ரூ. 5,00,000 /–ம் ஆகும்.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 121 / 2018 / எச்1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 20 / 2018, நாள் : 12.01.2018**

வெள்ளகோவில் நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு தேவையான ஒரு கணினி மற்றும் ஒரு பிரிண்டர் சப்ளை செய்ய 10.01.2018–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் முகவரி | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | Spyder Technology,<br>No. 15, Binny compound, Mak complex, Tiruppur | ரூ. 76,200 /- |
| 2 | Venus Tech,<br>Mevynaur Main road, Salem | ரூ. 79,670 /- |

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணிகளின் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3) இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண். 2120 / 2017 / டி1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**(ஒப்பம்) திரு. இ. ஷாஜஹான்**
**தனி அலுவலர் /**
**ஆணையாளர்**
**வெள்ளகோவில் நகராட்சி**
**திருப்பூர் மாவட்டம்**